செ.வெ.எண். 1008 நாள் 16.11.2010

# அரசு குழந்தைகள் நல மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையம், சென்னை - 8

## புதிய எண்ணியல் ஊடுகதிர் கருவி (Digital X-ray) திறப்பு விழா
## தேசிய பச்சிளம் குழந்தைகள் நலவாரம் (National New Born week) துவக்கவிழா
## சிறுநீர் அடக்கு திறனியல் பிரிவு (Child urinary continence clinic ) துவக்க விழா

எண்ணியல் ஊடுகதிர் கருவி :

அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில் ஊடுகதிர் துறை கடந்த 42 வருடங்களாக செயல்பட்டு வருகிறது. இதில் நாள் ஒன்றுக்கு 400 ஊடுகதிர் படங்களும் 30 சிறப்பு ஊடுகதிர் படங்களும் (மாவுப் படம்) எடுக்கப்படுகின்றன. ஏண்ணியல் ஊடுகதிர் என்பது ஒரு முக்கியமான தொழில்நுட்ப மாற்றமாகும். இதன் மூலம் நிழற்படங்கள் இல்லாமலேயே எண்ணியல் மூலம் படங்கள் எடுக்கமுடியும். குறைந்த நேரம், குறைந்த கதிர்வீச்சு, குறைந்த வேதிப்பொருட்கள் செலவு ஆகியவை இக்கருவியின் முக்கிய நன்மைகள் ஆகும். அதனுடன் எண்ணியல் முறையின் மூலம் எடுப்பதால் அப்படங்களை கழுவும் நேரம், செலவு மற்றும் படங்களை பாதுகாக்கும் அவசியம் ஆகியவை பெரிதும் குறைகின்றன. இதனால் பல நவீன மருத்துவமனைகள் இம்மாதிரியான ஊடுகதிர் படங்கள் எடுக்க விழைகின்றன. தமிழக அரசு அனைத்து மருத்துவ மனைகளுக்கும் இந்த எண்ணியல் ஊடுகதிர் கருவியை வழங்கி வருகின்றது. கிட்டத்தட்ட 80 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள இந்த கருவி அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில் இன்று முதல் செயல்பட உள்ளது.

சிறுநீர் அடக்கு திறனியல் பிரிவு

சில குழந்தைகளுக்கு சிறுநீரை அடக்கும் திறன் இல்லாமல் எந்த நேரமும் சிறுநீர் வழிந்து கொண்டே இருக்கும் பிரச்சினை ஏற்படுகிறது. இதன் முக்கிய காரணம் நரம்பு மண்டலத்தில் நோய்களும் சிறுநீர் பாதையில் ஏற்படும் பிரச்சனைகளும் ஆகும். இக்குழந்தைகள் பள்ளிக்கு செல்வதிலும் நண்பர்களுடன் பழகுவதிலும் பல பிரச்சினைகள் எதிர்கொண்டு மனநிலை பாதிக்கும் நிலை உள்ளது. பெற்றோர்கள் பெரிதும் மனக் கவலைக்கு உள்ளாகின்றனர். இக்குழந்தைகளுக்கு ஏற்படும் பிரச்சனைகளை கண்டறிந்து சீர்செய்ய சிறுநீர் அடக்கு திறனியல் பிரிவு என்று ஒரு புதிய பிரிவு இம்மருத்துவமனையில் சிறுநீரக அறுவை சிகிச்சை பகுதியில் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. கடந்த 5 ஆண்டுகளாக கிட்டத்தட்ட 1500 குழந்தைகள் இப்பிரச்சனையுடன் இம்மருத்துவ மனைக்கு வருகின்றனர். இவர்களில் அநேகர் 5 லிருந்து 10 வயதிற்கு உட்பட்ட குழந்தைகள்.

பச்சிளம் குழந்தைகள் நல வாரவிழா

குழந்தைகளிடையே ஏற்படும் இறப்பு விகிதத்தில் பச்சிளம் குழந்தைகளிடையே (பிறந்த 1 மாதத்திற்குள்) இறப்பு விகிதம் அதிகமாக காணப்படுகிறது. தமிழக அரசு இவ்விறப்பைக் குறைக்க அனைத்து மருத்துவ மனைகளிலும் பல சிறப்பு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. இந்த வருடத்தில் இப்பச்சிளங் குழந்தைகள் நல வாரத்தின் மையக் கருத்து "எடை குறைந்த குழந்தைகள் பராமரித்தலின் முன்னேற்றம்" என்பதாகும். இதற்கு முக்கிய காரணம் பிறப்பு எடை 2500 கிராமிற்கு குறைவான குழந்தைகளிடையே இறப்பு அதிகமாக உள்ளது. தாயாருக்கு கர்ப்ப காலத்தில் ஏற்படும் இரத்த அழுத்தம், இரத்த சோகை, ஊட்டச்சத்து குறைவு ஆகியவை பிறப்பு எடை குறைவதற்கு முக்கிய காரணங்களாகும்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9